பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

17 03 2026 TUESDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஜெர்மன் வெளியுறவு அமைச்சர் திரு. Johann Wadephul உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் அமைச்சர்களை Brussels-ல் சந்தித்து பேசினார்.

2. நாட்டின் வேலைவாய்ப்பின்மை விகிதம், கடந்த பிப்ரவரி மாதத்தில் 4 புள்ளி ஒன்பது சதவீதமாக குறைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. தமிழகத்தில் தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ள நிலையில், தேர்தல் பறக்கும் படையினரின் கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

4. தமிழகத்தின், மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. Orleans மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி ஃபிரான்ஸில் இன்று தொடங்குகிறது.

>>>>>><<<<<<<

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், ஜெர்மன் வெளியுறவு அமைச்சர் திரு. Johann Wadephul உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் அமைச்சர்களை Brussels-ல் சந்தித்து பேசினார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், ஸ்லோவாக்கியா, கிரீஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களையும் சந்தித்து பேசியதாக குறிப்பிட்டுள்ளார்.

மேற்காசியாவில் நிலவும் மோதல் குறித்து அப்போது கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனி அமைச்சருடனான பேச்சுகளின் போது, இருதரப்பு நல்லுறவுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விவாதித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில், தில்லியில் நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப தாக்கம் தொடர்பான உச்சிமாநாட்டில், ஸ்லோவாக்கிய அதிபர் பங்கேற்றதை தாம் நினைவுகூர்ந்து ஆலோசனை நடத்தியதாக அவர் கூறியுள்ளார்.

மேலும், அந்நாட்டுடன் பாதுகாப்பு, விண்வெளி மற்றும் உற்பத்தி துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் ஆலோசனை நடத்தியதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து வெளியுறவு அமைச்சராக அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்ட திரு. Tom Berendsen-னுக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டதாகவும் திரு. ஜெய்சங்கர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<<

நடிகர் ரஜினிகாந்த் குறித்து, த.வெ.க. நிர்வாகி திரு. ஆதவ் அர்ஜூனா தெரிவித்த கருத்துக்கு, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தமிழகம் மட்டுமல்லாது, உலகம் அறிந்த நடிகரான ரஜினிகாந்த், அவரது உடல்நிலையை கருதி, அரசியல் முடிவை கைவிட்டதாக கூறியுள்ளார்.

இதேபோல், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள பதிவில், நடிகர் ரஜினிகாந்தின் புகழுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் திரு. ஆதவ் அர்ஜூனா பேசியிருப்பது ஏற்கத்தக்கதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

நாட்டின் வேலைவாய்ப்பின்மை விகிதம், கடந்த பிப்ரவரி மாதத்தில் 4 புள்ளி ஒன்பது சதவீதமாக குறைந்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோரின் வேலைவாய்ப்பின்மை விகிதம், கிராமப்புறங்களில் 4 புள்ளி இரண்டு சதவீதமாக நீடிப்பதாகவும், நகர்ப்புறங்களில் 6 புள்ளி ஆறு சதவீதமாக குறைந்திருப்பதாகவும் மத்திய புள்ளியில் மற்றும் திட்ட அமலாக்கத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

15 வயதுக்கு மேற்பட்ட பெண்களின் வேலைவாய்ப்பின்மை விகிதம், 5 புள்ளி ஒரு சதவீதமாக குறைந்துள்ளதாகவும், இது கடந்த ஜனவரி மாதத்தில் 5 புள்ளி ஆறு சதவீதமாக இருந்தது என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகள் அமலுக்கு வந்துள்ள நிலையில், வேட்புமனு தாக்கல், வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

மதுரை மாவட்டத்தில் பதற்றமான வாக்குச்சாவடிகளாக அறியப்பட்டுள்ள இடங்களில், தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, மத்திய பாதுகாப்பு படையினர் கூடுதலாக பணியமர்த்தப்பட்டு, கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அம்மாவட்ட ஆட்சியரும், தேர்தல் அலுவலருமான திரு. பிரவின் குமார் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - பிரவின்குமார் 44 sec.)

தருமபுரி மாவட்டத்தில், 85 வயதான மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தபால் மூலம் வாக்களிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அம்மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. சதிஷ் கூறினார்.

(சவுண்ட் பைட் – சதிஷ் - 44 sec.)

>>>>>><<<<<<

தமிழகத்தின், மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள மாவட்டங்கள் மற்றும் தெற்கு கடலோர மாவட்டங்களில் இன்று மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியின், குமரிக்கடல் அருகே வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுவதன் காரணமாகவும், வடக்கு தமிழக கடலோரப் பகுதியில் நிலவும் மற்றொரு வளிமண்டல சுழற்சி காரணமாகவும் இன்றுமுதல் அடுத்த 3 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டியுள்ள மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் நாளையும், நாளை மறுநாளும் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

ஈரானுக்கு எதிரான தாக்குதல் நீண்டகாலம் தொடரக்கூடாது என்பதில் ரஷ்யா உறுதியுடன் உள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<<

இலங்கையில் பெட்ரோலியப் பொருட்களின் தட்டுப்பாட்டை சமாளிக்கம் வகையில், அரசு அலுவலகங்கள், பல்கலைக் கழகங்கள், பள்ளிகள் மற்றும் நீதிமன்றங்களுக்கு புதன்கிழமை தோறும் கூடுதலாக விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<<

பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் உள்ள அந்நாட்டு ராணுவ முகாம் மீது, ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளதாக ஆப்கானிஸ்தான் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<<

கத்தார் நாட்டிலிருந்து புதுதில்லி, மும்பை, கொச்சி உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கு ஆயிரத்து 100 இந்தியர்கள் நேற்று புறப்பட்டுச் சென்றதாக தோஹாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் முதன்முறை வாக்காளர்கள் உள்ளிட்ட அனைவரும் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இருசக்கர வாகன பேரணி நடைபெற்றது.

>>>>>><<<<<<<

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அருகே, இருவேறு இடங்களில் தேர்தல் பறக்கும் படையினர் நடத்திய சோதனையில், ஆவணமின்றி எடுத்துச் செல்லப்பட்ட 44 லட்சத்து, 7 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

>>>>>><<<<<<<

தென்காசி மாவட்டம், சுந்தரபாண்டியபுரம் அருகே, வாகன தணிக்கையின் போது, ஆவணம் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ஒரு லட்சத்து 26 ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

>>>>>><<<<<<<

மயிலாடுதுறை மாவட்டத்தில் பதற்றமான வாக்குச்சாவடிகளாக அறியப்பட்டுள்ள 54 வாக்குச்சாவடிகளில் மத்திய பாதுகாப்பு படையினருடன், மாநில காவல்துறையினரும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுவார்கள் என்று காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<<

சட்டப்பேரவை தேர்தலை ஒட்டி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊடக சான்று கண்காணிப்பு குழு மையத்தை, ஆட்சியர் திருமதி. சினேகா பார்வையிட்டார்.

>>>>>><<<<<<<

திருவாரூர் மாவட்டம். மன்னார்குடியில் மக்கள் அச்சமின்றி வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில், எல்லைப் பாதுகாப்பு படையினர் மற்றும் பாதுகாப்பு படையினர் பங்கேற்ற அடையாள அணிவகுப்பு நடைபெற்றது.

>>>>>><<<<<<<

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூரில் உள்ள பெயிண்ட் கடை ஒன்றில் நேரிட்ட தீ விபத்தில், ஏராளமான பொருட்கள் எரிந்து சேதமடைந்தன.

>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

*Orleans* மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி ஃபிரான்ஸில் இன்று தொடங்குகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த், கிரண் ஜார்ஜ், மாள்விகா பன்சூட், தன்வி சர்மா உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

>>>>>><<<<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில், பஞ்சாப் – கோவா அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற்ற ஆட்டம் டிரா ஆனது.

புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டன.

>>>>>>END<<<<<<<